**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009**
**Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

# எனது பெரியண்ணாவின் நினைவுகள்

(ஒப்பியப்பன்கோவில் வைணவரத்னம்
ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே.பி.வி.கிருஷ்ண பட்டாச்சாரியார்)

எனது தகப்பனாரோடு கூடப்பிறந்த எனது பெரியப்பாவை (நடார் ஸ்வாமியை) பெரியண்ணா என்று தான் எங்கள் குடும்பத்தில் யாவரும் அழைப்பர். எனவே இக்கட்டுரையின் தலைப்பிலும் நடார் ஸ்வாமியை பெரியண்ணா என்றே குறிப்பிட்டுள்ளேன். அவரிடம் அடியேன் அனுபவித்த உயர்ந்த பழக்கங்களை பற்றியும், கோவில்களிலும், க்ருஹத்திலும் அவருடைய ஆத்மார்த்தமான ஈடுபாட்டையும், ச்ரத்தையாக ஒப்பியப்பனுக்குச் செய்த ஆராதனைகளையும், அவர் அனுஷ்டித்த அக்னி உபாசனையைப் போன்ற சிலவற்றைப் பற்றி அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பெரியண்ணா சூர்யோதயம் ஆகி தூங்கியதை நாங்கள் பார்த்ததே கிடையாது. ப்ராம்ம முஹூர்த்தத்தில் எழுந்து நித்யகர்மானுஷ்டானங்களைச் செய்து எங்களைப் போன்ற சிஷ்யர்களை கூப்பிட்டு (எழுப்பி) பழைய மந்த்ரங்களை திருவை சொல்லச்சொல்லுவார். அல்லது புது மந்த்ரங்களை அத்யாபனம் செய்து வைப்பார். மந்தரங்களை நாங்கள் கற்றுக்கொள்ளும்போது ஸ்வரசுத்தமாக சொல்லுகின்றோமா என்று ஊர்ந்து கவனிப்பார். குறிப்பிட்ட காலத்தில் ஔபாஸனம், ப்ரம்மயக்ஞம், வைச்வதேவம் போன்ற நித்ய கர்மாவை அவிச்சின்னமாகச் செய்வார். நடார் கிராமத்தில் இருந்தவரை கோ ஸம்ரக்ஷணம், கோ பூஜை செய்வதில் விருப்பமுடையவராக இருந்தார். பகல் வேளைகளில் தெலுங்கு புஸ்தகங்களைப் பார்த்தும், க்ரந்த புஸ்தகங்களைப் பார்த்தும் தெய்வீகப்ரயோகத்திலும் மானுஷீக ஸம்ஸ்காரங்களிலும் உள்ள சந்தேகங்களுக்கு தீர்வுகண்டு அவற்றை எங்களுக்கும் எடுத்துச் சொல்லுவார். ஸ்ரீவைகானஸ ஸமூஹத்தில் இருக்கும் பெரியோர்களை கண்டால் மானுஷீகத்திலும் தைவீகத்திலும் தனக்கு இருக்கும் ஸந்தேகங்களைக் கூறி அவற்றை நிவர்த்தி செய்துகொள்வார். வேதவிற்பண்ணர்களைப் பார்த்தால் உடனே அவர்களை ஸேவித்து விடுவார்.

தினமும் ஸன்னிதியில் திருவாராதனத்தை முடித்துக்கொண்டு க்ருஹத்திற்கு வந்து க்ருஹதிருவாராதனத்தையும் செய்வார். அவர் இருந்தபோது ஒப்பியப்பன்கோவில் ஒரு வாரத்தில் இரண்டு அல்லது மூன்று திருக்கல்யாண உற்சவம் நடக்கும். அதை ஆசார்யனாக இருந்து செய்வதற்கு நடார் கிராமத்திருந்து நடந்தே வந்து செய்துவைப்பார். ஸாயம் வேளையில் ஸாயம் ஸந்த்யாவந்தனத்தையும் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பாராயணத்தையும் ஔபாஸனத்தையும் விடாமல் செய்வார். இவைகளை ஒரு தபஸாக ஏற்று தன்னுடைய வாழ் நாள் முழுவதும் அனுஷ்டித்தார்.

தீர்த்தயாத்ரைக்குச் செல்வதில் மிகவும் விருப்பமுள்ளவர். ஒரு முறை பத்ரியாத்ரைக்கும், மூன்று முறை காசிக்கும், பலமுறை திருப்புல்லாணிக்கும் யாத்ரை சென்று வந்துள்ளார்.

ஸ்ரீவைகானஸத்தில் பூர்வாபர ப்ரயோகங்களை அவரவர்கள் தங்களுடைய கையால் எழுதிய ப்ரயோக நோட்டுகளைக் கொண்டு அந்தந்த கர்மாக்களைச் செய்துவந்தனர். அவர்களுக்கும் ஸ்ரீவைகானஸ குலத்திற்கும் உதவும் வண்ணம் தமிழ் காரிகையுடன்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhattar -2009 Kumbhakonam, Oppiliappankoil, Tamil Nadu, India.**

க்ரந்தாக்ஷரத்தில் மந்த்ரங்களை பாகவதபுரம் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. நாராயணபட்டாச்சாரையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு பல க்ரந்தங்களை அச்சிட்டார். 1960ல் ச்ராத்தப்ரயோகம் புஸ்தகம் வெளியிடும் போது நடார் கிராமத்திற்கும் கும்பகோணத்திற்கும் பஸ் வசதி இல்லை. இருப்பினும் நடந்தே சென்று சாரதாவிலாஸ் ப்ரஸ்ஸில் அச்சுப்பிழைகளைத் திருத்தி அந்த புஸ்தகத்தை பிரசுரித்தார். அதனைத் தொடர்ந்து அபரப்ரயோகம், பூர்வப்ரயோகம், விவாஹப்ரயோகம் போன்ற புஸ்தகங்களை செவ்வனே வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு புஸ்தகத்தை அச்சிடுவதற்கு முன்பு நமது பெரியோர்களிடம் காண்பித்து அவர்களிடம் ஸம்மதத்தை பெற்றே வெளியிட்டார் என்பது நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம்.

1980ஆம் ஆண்டு நடார் கிராமத்திருந்து ஒப்பியப்பன்கோவிலுக்கு நிரந்தரமாக ஜாகைக்கு வந்தார். அன்றுமுதல் ஸன்னிதியில் ஆழ்வார்கள் அருகில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீமத்விகனஸாசார்யருக்கு நெய் தீபம் ஏற்றி ஒவ்வொரு ஆவணி ச்ரவணத்திற்கும் திருமஞ்சனம் செய்து வந்தார். ஸ்ரீவைகானஸ சாஸ்த்ரத்தில் எப்பொழுது ஸந்தேகங்களைக் கேட்டாலும் மகிழ்ச்சியுடன் அவற்றை விளக்கிக்கூறுவார். ஒப்பியப்பன் ஸன்னிதியில் அர்ச்சகராகவும், ஆசார்யராகவும், ஸம்ப்ரோக்ஷணம் நடந்த ஸமயங்களில் ஸர்வஸாதகமாகவும், பிரதிவருடம் நடக்கும் பவித்ரோத்ஸவம் ப்ரம்மோத்ஸவங்களுக்கு ப்ரதானாசார்யராகவும் இருந்து மந்த்ரலோபமில்லாமல் அர்ச்சா கைங்கர்யத்தைச் செய்தார். ப்ரம்மோத்ஸவத்தில் புஷ்பயாக மஹோத்ஸவத்தை முதன்முதல் ஒப்பியப்பன் கோவில் செய்தவர் என்ற பெருமை இவரையே சேர்ந்ததாகும்.

விளங்குடி, வடரெங்கம் போன்ற பற்பல வெளியூர் ஸம்ப்ரோக்ஷணங்களையும் ஸர்வஸாதகமாக ஏற்று நடத்தியிருக்கிறார். அதில் அடியேனும் ரித்விக் ஸ்தானம் வஹித்துள்ளேன். தானே தக்கிளியில் நூல்நூற்று நல்ல நாள் பார்த்து முறுக்கி யக்ஞோபவீதமாக்கி தரித்துவந்தார். 1987ஆம் ஆண்டு சென்னையில் ஸ்ரீவைகானஸ அர்ச்சக பெனிபிட் சொஸைடி நடத்திய ஆண்டுவிழாவில் இவரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அதே ஆண்டு கோனேரிராஜபுரம் ஆஸ்திக ஸபையில் ஸ்ரீவைகானஸ ஆகம குலபதி: என்றும், ஸ்ரீவைகானஸ ஆகம ஞானபாஸ்கரர் என்ற பட்டங்களையும் அளித்து கௌரவித்தார்கள். 1989ல் சேலத்தில் ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. டாக்டர் எஸ்.வி. சந்தானபட்டாச்சாரியார் ஸ்வாமி இவரை பாராட்டி கௌரவித்து பாராட்டு பத்திரத்தையும் வழங்கினார்.

தன்னுடைய வாழ்நாளில் எவ்வித ப்ரதிபலனையும் எதிர்பாராமல் வைதிக கார்யங்களைச் செய்துகொண்டும் தார்மீக வாழ்க்கை வாழ்ந்தும் ஸத்தியத்தின் வழியிலும் நடந்த மஹானை (அவரை) அவரது மாணாக்கர்களான எங்களாலும் அவரை நன்கு அறிந்தவர்களாலும் என்றென்றும் மறக்க இயலாது.

மனிதர்களாளும் மாமன்னர்களாலும் போற்றத்தக்க மாமனிதர் எனது பெரியண்ணா....

* * *